பாடம் – 8

# நபியவர்களின் நற்குணங்கள்

அருமை நபிகள் நாயகமோ
அழகிய குணங்கள் பெற்றார்கள்
பெருமை இன்றிப் பணிவுடனே
பிறரை மதித்து வாழ்ந்தார்கள்

சிறுவர் தம்மை அன்புடனே
சிறப்பாய்ச் சேர்த்து மகிழ்ந்தார்கள்
வறியவர் தம்மை ஆதரித்து
வசதிகள் செய்து கொடுத்தார்கள்.

துன்பப்படுவோர் நிலைகண்டு
துயரம் நீக்கி வைத்தார்கள்
அன்பாய்ப் பேசி அனைவரையும்
ஆதரவோடு அணைத்தார்கள்.

